**செய்தி வெளியீடு எண்: 183** **நாள்: 12.03.2018**

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தலைமையிலான
அரசின் சாதனைகளை மக்களிடையே கொண்டு செல்லும்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கான
பணி ஆய்வுக் கூட்டம் மற்றும் பயிற்சி வகுப்பினை
மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்
திரு. கடம்பூர் ராஜூ அவர்கள் தொடங்கி வைத்தார்.

*****

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் மற்றும் பயிற்சி வகுப்பு சென்னை, கலைவாணர் அரங்கில் உள்ள மினி கூட்ட அரங்கில் இன்று **(12.3.2018)** நடைபெற்றது .

இப்பயிற்சி வகுப்பினை மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள் தொடங்கி வைத்து ஆற்றிய உரை,

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இவ்வரசானது ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் அவர்களது நலனில் அக்கறைக் கொண்டு பல்வேறு சிறப்பான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த சட்டமன்றத் தேர்தல் அறிக்கையில் அளித்த அனைத்து வாக்குறுதிகளையும் முனைப்புடன் நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் பொறுப்பேற்றவுடன் முதன் முதலில், பணிபுரியும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனத் திட்டம், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி ரூ.18,000 ஆக உயர்வு, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை இரு மடங்காக உயர்வு, மதுவிலக்கு படிப்படியாக அமல்படுத்தப்பட்டு தமிழ்நாட்டில் மேலும் 500 மதுக்கடைகள் மூட ஆணை மற்றும் மீனவர்களுக்கு தனி வீட்டு வசதி திட்டத்தின் மூலம் 5,000 குடியிருப்புகள் கட்ட ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிவித்தபடி, பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா 30 மாவட்டங்களிலும் சீரும் சிறப்புமாக நடத்தப்பட்டு, இவ்விழாக்களில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ரூ. 5127.11 கோடி

மதிப்பீட்டில் முடிவுற்ற 2329 திட்டப் பணிகளை திறந்துவைக்கப்பட்டது. ரூ.5712.90 கோடி மதிப்பீட்டில் 3200 புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. 521 புதிய அறிவிப்புகள் அறிவிக்கப்பட்டு, ரூ.5,397.52 கோடி மதிப்பீட்டில் 8,11,481 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

இதுதவிர இதர அரசு விழாக்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ரூ.11,827.34 கோடி மதிப்பீட்டில் 35,819 முடிவுற்ற பணிகள் திறந்துவைத்தும், ரூ.8,837.29 கோடி மதிப்பீட்டில் 6,411 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் பொறுப்பேற்ற கடந்த ஓராண்டில் ரூ.331.68 கோடியில் மேற்கொள்ளப்பட்ட குடிமராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. ஏரி, கால்வாய் மற்றும் நீர்த்தேக்கங்களில் உள்ள வண்டல் மண்ணை விவசாயிகள் மற்றும் மண்பாணை தொழிலாளர்களுக்கு இலவசமாக அளித்துள்ளது. மேட்டூர் அணை வரலாற்றில் முதன் முறையாக தூர் வாரப்பட்டது.

பள்ளிக் கல்வித் துறையின் மூலம் 3,359 ஆசிரியர்கள் மற்றும் 4,356 ஆசிரியல்லாதோர் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். போட்டித் தேர்வுக்கான பயிற்சி மையங்கள் மற்றும் கல்வித் தரத்தை மேம்படுத்தும் வகையில் புதிய பாடத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பில் 4 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் நிலத்திற்கான வழிகாட்டி மதிப்பு 33 விழுக்காடு குறைப்பு. அரசின் கோரிக்கையை ஏற்று, 50க்கும் மேற்பட்ட பொருட்கள் மீதான வரி விலக்கு மற்றும் வரி குறைப்பு. தமிழை போற்றி புகழ்ந்திடும் வகையில் ஹார்வார்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கைக்காக ரூ.10 கோடி நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. 18.54 லட்சம் நபர்களுக்கு விலையில்லா செட்டாப் பாக்ஸ்கள் வழங்கப்பட்டுள்ளது.

ரூ.50.8 கோடி செலவில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்தில் நினைவு மண்டபம் அமைக்கவும், மாண்புமிகு அம்மா அவர்கள் வாழ்ந்த வேதா இல்லத்தை நினைவில்லமாக மாற்றவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

செய்தித்துறை வழியாக ரூ. 1.30 கோடி மதிப்பீட்டில் ஹைதர் அலி, திப்பு சுல்தான் நினைவு மண்டபம். ரூ.6.05 கோடி செலவில் நடிகர் திலகம் செவாலியர் சிவாஜி கணேசன், மனு நீதி சோழன்,

பட்டுக்கோட்டை அழகிரிசாமி, ஹைதர் அலி, திப்புசுல்தான் நினைவு மணிமண்டபங்கள் திறப்பு. ரூ.1.50 கோடி மதிப்பில் கோவை மாவட்டம் அன்னூரில் உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு மணிமண்டபம். ‘கொடிகாத்த குமரன் மற்றும் விடுதலைப் போராட்ட வீரர் பூலித்தேவன் பிறந்தநாட்களை அரசு விழாவாக கொண்டாட ஆணை. சிதம்பரத்தில் சுவாமி சகஜானந்தா நினைவு மண்டபம் திறப்பு. திருச்செந்தூரில் டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் மணிமண்டபம். ரூ.2.52 கோடி மதிப்பீட்டில், புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா வளைவு சென்னை காமராஜர் சாலையில் அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது.

மக்கள் தொடர்பு பணியானது ஒரு சவாலான பணியாகும். இதில் அனைவரையும் ஒருங்கிணைத்து சென்று நன்மதிப்பை பெறுவது கடினமான செயல். இருப்பினும் தற்போது செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் அனைத்து விடுமுறை நாட்களிலும், மழை வெள்ளம், புயல், பண்டிகை காலங்களிலும் விடுப்பின்றி பணியாற்றி இத்துறைக்கு பெருமை சேர்த்து வருகின்றனர். மேலும், குறிப்பாக சொன்னால் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா அறிவிக்கப்பட்ட குறுகிய காலத்தில் அனைத்து மாவட்டங்களிலும் மிகப் பிரம்மாண்டமாக சிறப்பான முறையில் நடைபெற செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் ஆகியோரின் பணி அனைவராலும் பாராட்டப்பட்டதாகும்.

மேலும், அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் எண்ணற்றத் திட்டங்களையும், சாதனைகளையும், நலத்திட்ட உதவிகளையும் பொதுமக்களுக்கு கொண்டு செல்லும் மகத்தான பணியினை மேற்கொள்ளும் பெரும் வாய்ப்பு நமக்கு கிடைத்துள்ளது. இப்பணியினை தலைமையிடத்தில் செவ்வனே மேற்கொள்வது போன்று, மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலகங்களும் சிறப்பாக செயல்பட வேண்டும். வளர்ந்து வரும் நவீன விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ப ஊடகங்களுக்கு உடனுக்குடன் செய்திகள் வழங்கிட ஏதுவாக செய்தி மக்கள் தொடர்புத் துறையில் எப்போதும் இல்லாத அளவிற்கு உங்கள் பணி சிறக்க உங்களுக்கு கணினி, மடிக்கணினி, டேட்டா கார்ட், கைப்பேசி, புகைப்படக் கருவி, நவீன விளம்பர ஊர்தி உள்ளிட்ட வசதிகள் மற்றும் பல்வேறு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே மக்கள் தொடர்பு அலுவலர்கள் தங்கள் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகள் குறித்து செய்தியாளர் சுற்றுப் பயணம், வெற்றிக் கதைகள், சிறு புகைப்படக் கண்காட்சிகள், அரசின் சாதனை விளக்கும் குறும்படங்களை திரையரங்குகள் மற்றும் வீடியோ வேன் மூலம் ஒளிபரப்பும் பணியினை தொய்வில்லாமல் மேற்கொள்ளப்படவேண்டும்.

உங்களின் பணி சிறப்பாக அனைவராலும் பாராட்டக் கூடிய வகையில் இருந்தாலும், துறை வல்லுநர்களைக் கொண்டு பயிற்சி பெறும் பட்சத்தில் உங்களுடைய பணி ஏதும் குறைவின்றி நடைபெறவும், பணியின் இலக்கை அடைவதற்கும் அது ஏதுவாக இருக்கும். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு இதற்காக நிதி ஒதுக்கி ஆண்டுதோறும் செய்தித்துறை அலுவலர்களுக்கு சிறப்பு பயிற்சி வகுப்புகள் அளிக்கப்பட்டு வருகிறது.

இதன் மூலம், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் தங்கள் பணிகளை மேலும் சிறப்பாக மேற்கொள்ள ஏதுவாகவும், அரசின் திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளை நன்கு அறிந்து அதற்கேற்றவாறு எவ்வாறு பணித்திறனை மேம்படுத்துதல், மக்கள் தொடர்புப் பணியில் புதிய யுக்திகளை கையாளுதல், தொய்வில்லாமல் எவ்வாறு பணியாற்றுதல், பிற துறைகள் மற்றும் அலுவலர்களுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்ளுதல், தகவல்களை விரைவாக ஊடகங்களுக்கு எடுத்துச்செல்ல மேற்கொள்ளப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்து விரிவான பயிற்சி அளிக்கப்படுகிறது.

மேலும், ஊடக செய்தியாளர்களுக்கு வழங்கக்கூடிய விலையில்லா பேருந்து பயண அட்டை, செய்தியாளர் அங்கீகார அட்டை, வாடகைக் குடியிருப்பு, சலுகை விலையில் வீட்டு மனைப்பட்டா வழங்குதல், பத்திரிகையாளர் ஒய்வூதியம் மற்றும் குடும்ப ஒய்வூதியம், பணிக்காலத்தில் இறக்கும் பத்திரிகையாளர் குடும்ப நல உதவி போன்றவைகள் பெற்றுத் தருதல் போன்ற விதிமுறைகள் குறித்தும், துறை அலுவலர்கள் மூலம் உரிய அறிவுரை அளிக்கப்படுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவடைந்துள்ள நிலையில், அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்கள் நாளிதழ்களில் வெளியிடுவதோடு மட்டுமல்லாமல், இத்துறையின் மூலம் பல்வேறு சாதனைகள் குறித்து குறும்படங்கள் தயார் செய்யப்பட்டு திரையரங்குகளில் ஒளிபரப்பப்பட்டு வருகிறது. மேலும் பல்வேறு திட்டங்களின் பயன்களும் குறும்படங்கள் வாயிலாக திரையரங்குகளில் ஒளிபரப்பப்பட்டு வருகிறது. திரையரங்குகளில் அரசு செய்திப்படங்களை முறையாக ஒளிபரப்பப்படுகிறதா என்பதை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மற்றும் உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் ஆகியோர் அவ்வப்போது ஆய்வு செய்திட வேண்டும். அரசின் செய்திப்படங்களை ஒளிபரப்பாத திரையரங்குகள் மீது மாவட்ட ஆட்சித்தலைவர் மூலமாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

இவ்ஆய்வுக் கூட்டத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு.இரா.வெங்கடேசன் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையுரையும். செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் பொ. சங்கர், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையும் ஆற்றினார்கள். நிறைவாக கூடுதல் இயக்குநர் (செய்தி) திரு. எஸ்.பி. எழிலழகன் அவர்கள் நன்றி கூறினார்கள். இக்கூட்டத்தில், கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) திரு.உல.ரவீந்திரன், இணை இயக்குநர்கள் திருமதி. கி.சாந்தி, திரு.க.சண்முகசுந்தரம், திரு. மு.பா. அன்புச்சோழன், துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மற்றும் பிரிவு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**